**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

**CC. No: 244/2022** Date: 04.06.2026

**Prosecution Witness**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | **PW : 5** |
| Name | : | உமாசங்கர் |
| Father's Name | : | மணி |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Age | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 04.06.2026.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது தருமபுரியில் குடியிருந்து விவசாயம் செய்துவருகிறேன். சுமார் 10 ஆண்டுகளாக தமிழர் மரபு சந்தையை காவேரி பழத்தோட்டம் என்ற இடத்தில் வைத்து நடத்தி வருகிறேன். மேற்படி இடம் சேலம் – தருமபுரி பழைய பேருந்து நிறுத்தம் செல்லும் சாலைக்கு பள்ளமாக இருப்பதால் மழைக்காலங்களில் தண்ணீர் தேங்கும் நிலை ஏற்படும். அந்த இடத்தை சரிசெய்வதற்காக அவ்வப்போது நொறம்பு மண் கொட்டப்படும். சுமார் 2 வருடத்திற்கு முன்னதாக காலை சுமார் 8.30 மணிக்கு டாரஸ் லாரியில் மண் கொட்டிவிட்டு ரோட்டிற்கு செல்லும்போது டிப்பரை இறக்காமல் சென்றதால் சந்தைக்கு நுழையும் இடத்தில் வலது பக்கமாக உள்ளஒரு வீட்டின் மின் கம்பியில் பட்டு அறுந்துவிட்டது.

2. நான் மேற்படி தகவலை மின்வாரியத்திற்கு காலை சுமார் 9.30 மணிக்கு தெரிவித்தன் பேரில் அவர்கள் அந்த இடத்திற்கு காலை சுமார் 11.00 மணிக்கு வந்து சரிசெய்வதாக சொன்னவர்கள் அன்றைய தினம் மதியம் சுமார் 12.00 மணிக்கு சரிசெய்துவிட்டதாக கூறினார். அன்றைய தினம் மாலை தருமபுரி நகர உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து அரசு தரப்பில் அனுமதியின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

நான் போலிசார் விசாரணையில் கடந்த 22.11.2022 ம் தேதி காலை 10.00 மணிக்கு சரவணன் மற்றும் அவரது அண்ணன் அன்பு(எ) முத்து இருவரும் மனோகரிடம் சென்று

அவரை தகாத வார்த்தையால் பேசி, அவரை கீழே தள்ளி சரமாறியாக அடித்ததாகவும், சரவணன் மனோகரின் வாயின் மீது காலால் எட்டி உதைத்ததில் அவரது பற்களில் பலத்த அடிபட்டு, அதில் ஒரு பல் ரத்தம் கட்டியதாகவும், காயம்பட்ட மனோகரனை போக்கு வாகனம் மூலம் தருமபுரி அரசுமருத்துவமனைக்கு அனுப்பிவைத்தாகவும், மேற்படி சம்பவத்தை நான் நேரில் பார்த்தாக கூறிவிட்டு தற்போது மாற்றி பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**